புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# கோவேறு கழுதைகள் புதினத்தில் சமூக மதிப்புகள்

**ஆய்வாளர்**
**ஏ. சித்ரா**
*தமிழ்த்துறை, மொழிகள் புலம்,*
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,*
*பல்லாவரம், சென்னை – 600 117.*

## முன்னுரை

ஒரு சமூகத்தில் மக்கள் எவற்றையெல்லாம் பயன்படுத்துகின்றனர் என்பதைக் காலத்திற்கேற்பத் தெளிவுறுத்துபவை மதிப்புகள் ஆகும். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய கடமைகளை எடுத்துக்கூறுவது மதிப்புகள் என்று கூறமுடிகிறது. ''மதிப்பு'' என்பதற்கு நேரடியான பொருள் விளக்கம் இல்லையென்றாலும் அறிஞர்களின் கருத்துவழி அச்சொல்லுக்குரிய பொருளை ஓரளவு அறிந்துக்கொள்ள முடிகிறது. மக்கள் எவற்றுக்கு முதன்மை கொடுக்கின்றனரோ எவற்றை விரும்புகின்றனரோ அவற்றைச் சமூக மதிப்புகள் எனக் குறிக்கப்படுகிறது. சமூகத்தினுள்ளே பகிர்ந்து கொள்ளப்பெறும் நோக்கங்கள், மதிப்புகள் ஆகின்றன. இக்கட்டுரையில் சமூக மதிப்புகள், அறிஞர் தரும் விளக்கங்கள், மதிப்புகளின் இயல்புகள், மதிப்புகளும் விதிமுறைகளும், குறிக்கோள் மதிப்புகள், நடைமுறை மதிப்புகள், நேர்மதிப்புகள் எதிர் மதிப்புகள் போன்ற மதிப்புகளும் கோவேறு கழுதைகள் புதினத்தில் சமூக மதிப்புகள் இடம் பெறுவதை இவ்வாய்வில் காண்போம்.

## மதிப்பு பொருள் விளக்கம்

உளதாம் தன்மை உடைய அனைத்தும் நலம் என்றாலும் அந்த நலம் மனிதனைக் கவர்ந்து தன்னை நாடச் செய்யும் பொழுது அது மதிப்பு ஆகும். விரும்பத்தக்கது நலம் எனின் போற்றப்படுவது மதிப்பு என்று கருதமுடிகிறது. நலத்தை அறிந்து ஏற்றுக்கொள்ளும் போது அது மதிப்பு ஆகிறது.

> ***"நாடத் தகுந்தது எதுவும் மதிப்பு" என்று ரால்ஃப் பார்ட்டன் பெரி (Relph Barton Perry) என்ற மெய்யியலார் கூறுகிறார். Any object of my Interst, is values, (Collier's Enexclopaedia), p. 164.***

***“பொருள்களிடம் ஏதாவது ஆர்வம் காட்டும்போது அவை மதிக்கத்தக்கவை ஆகின்றன” என்று கோலியரின் கலைக் களஞ்சியம் (Collier’s Encyclopedia) கூறுகிறது. (Ibid., p. 164)***

*ஒரு மரம் அதன் கனிகளை வைத்து மதிப்பிடப்படுகின்றன. அதுப்போன்று மனிதனின் செயல்பாடுகளை வைத்து மதிப்பிடப்படுகிறான். மனிதனை நிறைவு செய்வது மதிப்பு எனத்தோன்றுகிறது. மனிதனுக்கு ஆசைகள் எழுகின்றன. தேவைகள் ஏற்படுகின்றன. சில கடமைகள் உண்டாகின்றன. இவை மனித அனுபவங்கள். எடுத்துக்காட்டாக ஒரு நல்ல நாடகத்தைப் பற்றி கேள்விப்படும் போது அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. பசி, களைப்பு முதலிய உணர்ச்சிகள் மேலோங்கும் போது முறையே உணவு, ஓய்வு முதலியவை தேவைப்படுகின்றன. திருமணம் புரிந்துக்கொண்ட ஒருவனுக்குத் தன் மனைவி, மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமைகள் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படுகின்ற ஆசைகள், தேவைகள் கடமைகள் ஆகியவற்றை நேர்மையான வழியில் நிறைவு செய்து கொள்ளத் தக்கவை அனைத்தும் மதிப்புகளாகின்றன. மதிப்புகள் இரண்டு வகைகள். முதல் வகை மதிப்பு அவனது ஆசை, தேவை முதலியவற்றை நிறைவு செய்து (Satisfaction), இரண்டாவது வகை மதிப்பு, மனிதத் தன்மையை முழுமையாக்குவது அல்லது உயர்த்தவது (Parfection) ஆகும்.*

***சமூக மதிப்புகளும், விதிமுறைகளும்***

***சமூகம்***

***சமூகம் (Society) என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். அல்லது ஒரே மாதிரியான அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட சமூகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குழுவையும் சமூகம் என அழைக்கிறோம். இக்குழுவில் உள்ளவர்களிடையே தொடர்ச்சியான சமூக உறவுகள் காணப்படும். இவ்வகையான குழுக்களில் இருப்பவர்கள் மேலாதிக்க கலாசச்சார எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டிருப்பர். தனித்துவமான பண்பாடு, நிறுவனம் சார்ந்த தொடர்புகள் இத்தகைய குழுவினரின் அடிப்படையாக அமைந்திருக்கும். விரிந்த அளவில் நோக்கும்போது சமூகம் என்பதை பல்வேறுபட்ட மக்கள் அல்லது மக்கள் கூட்டத்தை உள்ளடக்கிய பொருளியல், சமூக மற்றும் தொழில்துறை உட்கட்டமைப்பு. பொதுவாக சமூகம் என்பது தமிழர் என்பது போல ஒரு குறிப்பிட்ட மக்களை குறிக்கும்” (Alvin L. Bertrand (ed) an Assocaites, Rural Sociology), p.35.***

*சமூகம் என்பது ஒரு பரந்த பண்பாட்டுக்குழுவைக் குறிக்கும். ஒரு சமூகத்தின் மதிப்புகளும், விதிமுறைகளும் மிக நெருங்கியத் தொடர்புடையன. மதிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளே விதிமுறைகள் ஆகும். மதிப்புகள் விதிமுறைகளை நிர்ணயிப்பதும், நாளடைவில் விதிமுறைகளே மதிப்புகளாகவதுமாக அவை சமூக வாழ்வு முறைகளை நிர்ணயிப்பதில் இணைந்து செயல்படுகின்றன. சமூக விதிமுறைகள், விதிமுறைகளின் அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய அறிவு மதிப்பாய்விற்குத்துணை செய்வதாய் அமைகிறது. இதனால்,*

***“ஒரு வரவமைக்குட்பட்ட ஒழுகலாறு அல்லது பண்பாடு என்பது அதன் விதிமுறை அமைப்பின் விளைவே எனலாம். இவ்வமைப்பின் ஒரு பகுதியில் ஏற்படும் முக்கியமான மாற்றமானது மற்ற பகுதிகளிலும் ஏற்படுத்துவது கடமை. சமூக அமைப்பைச் சோதித்துப் பகுப்பாய்வு செய்வதை எளிமைப்படுத்துவதற்கு அச்சமூகத்தின் முக்கிய செயற்பாடுகளை இயக்குகிற விதிமுறைகளையே சமூகவியலார் கூர்ந்து நோக்குகின்றனர்” என்பது இங்கு சிந்திக்கதக்கது. (Raymond W. Mack and Kimball young, Sociology and Social life, p. 64.)***

***மதிப்புகளின் வகைகள் (Classification of Values)***

*மதிப்புகளை அறிஞர் பெருமக்கள் பல்வேறு விதமாக வகைப்படுத்துவர். பால்ராபிசெக் என்ற சமூக சிந்தனையாளர் இலக்கு அடிப்படையில் மதிப்புகளை முற்றிலும் தற்சார்பு மதிப்புகள் (Purely Subjective Values) சார்நிலை மதிப்புகள் (Relative Values) தனி முதல் மதிப்புகள் (Absolute Values) என்று வகைப்படுத்துவார்.*

*பால்ராப் கருத்துப்படி விரும்பத்தக்க தன்மை (Agree Ableness) என்பது முற்றிலும் தற்சார்பு மதிப்பு. ஒரு இலக்கை அடைய இந்தப்பொருள் விரும்பத்தக்கத்தன்மை உடையது என்பது தனி நபரால் நிர்ணயிக்கப்படுவதால் இது தற்சார் மதிப்பாகும் என்று குறிப்பிடுகிறார். பயன்படும் தன்மை (Usefulness) என்பதைச் சார்நிலை மதிப்பு என்பர்.*

*ஓர் இலக்கை அடைய இந்தப்பொருள் பயன்படுகிறது என்ற இலக்கின் அடிப்படையில் பயன்படும் தன்மை மதிப்புகள் தம்மளவிலேயே இலக்குகளாய் திகழ்வதால் இவை தனி முதல் மதிப்புகளாகும். அடுத்து முற்றிலும் தற்சார்பு மதிப்புகளை விளக்கவோ, வரையறுக்கவோ முடியாதென்றும், தனிமுதல் மதிப்புகளை விளக்க முடியுமே அன்றி வரையறுக்க முடியாதென்றும், சார்நிலை மதிப்புகளை அவற்றின் இலக்கு அடிப்படையில் வரையறை செய்யலாமென்று கூறப்படுகிறது. நீண்ட நெடுங்காலமாகவே அழகு, நன்மை, உண்மை ஆகிய மதிப்புகள் எதையும் சாராது தம்மளவிலேயே இலக்குகளாய் விளங்கும் தனி முதல் மதிப்புளாகக் கருதப்பட்டுவருகின்றன. எது அழகு, எது நன்மை, எது உண்மை என்பதெல்லாம் இவற்றைப் பேணுகிறவர்களின் (Subscribers) அறிவு வளர்ச்சிக்கேற்பவும், அனுபவங்களுக்குகேற்புவும், சமூக வளர்ச்சிகேற்பவும் வேறுவேறு விதமாகவே மனித வரலாற்றில் தீர்மானிக்கப்பட்டு வருகின்றன.*

***மதிப்புகளைப் பற்றி அறிஞர்கள் தரும் கருத்துக்கள்***

*மதிப்புகள் என்ற சொல்லுக்கு அறிவியல் அறிஞர்களும், சமூகவியல் அறிஞர்களும், உளவியல் அறிஞர்களும், இலக்கியத் திறனாய்வாளரும், கல்வித்துறையினரும் பலவிதங்களில் வரைவிலக்கணம் காணவிழைக்கின்றனர்.*

***“ஒரு சமூகம் சரியானது என்றும் சார் நிலையில் முக்கியமானது என்றும் கருதுகின்றபோது அது அச்சமூகத்தின் மனப்பான்மைகள்” (J.B. Chitrambers, Introductory Rural Sociology, Pp. 250-251)***

*என்று J.B. சிட்டம்பர் குறிப்பிட்டுள்ளார்.*

***“பொருள்களைப் பற்றிய மனிதனின் மனப்பான்மையே மதிப்புகள்” என்று B.S. சான்யலும் (B.S. Sanyal, Culture; Introduction, p. 45)***

***“விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் மதிப்பாகும். ஒரு விருப்பம் நிறைவேறும்போது, அவ்விருப்பத்துக்கு இணையான இன்னொரு விருப்பமோ அல்லது அதைவிட முக்கியத்தவம் வாய்ந்த ஒன்றோ பங்கப்படாதிருத்தல்” என்று I.A. ரிச்சர்ஸ் அவர்களும் (I.A. Richaras, Principles of Literary criticism, p. 48)***

***“மதிப்புகள் பொருள்களின் தகுதி பற்றி கருத்துக்களாகவும் உணர்வு மயமான ஈடுபாடாகவும் அமைகின்றன. அறிவு நிலையிலும் உணர்வு நிலையிலும் அவை செயல்படுகின்றன என்று ஜேக் R. பிரான்ங்கல் (Jack R.B.Frankel, How to teack about values, p. 11)***

*போன்றோர் குறிப்பிட்டுள்ளனர்.*

***கோவேறு கழுதைகள் புதினத்தில் சமூக மதிப்புகள்***

*கோவேறு கழுதைகள் புதினத்தின் ஆசிரியர் இமையம் இன்றைய புதினப் படைப்பாளர்களில் இமையம் சிறந்த இடத்தைப் பெறுகிறார். சமூகப் பொறுப்புணர்வோடு கூடிய தனித்தன்மையை அவர் தம் படைப்புகளில் காணமுடிகிறது. யதார்த்தமும், கருத்து வளமும் செறிந்தவையாக அவரது புதினங்கள் அமைந்துள்ளன. இமையத்தின் கதையுலகம் எளிமையும் அன்பும் நிரம்பிய படைப்பு உலகத்தைச் சார்ந்தது. சக மனிதர்களின் மீதான அக்கறை உடையது. அன்றாட வாழ்வு தரும் நெருக்கடியைத் தாங்காமல் மனிதன் நெகிழ்வுறும் கனங்களைப் பதிவு செய்துள்ளது. சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் சிலபழக்க வழக்கங்களைக் கண்டிக்கிறது. அது மட்டுமின்றி வாழ்க்கை முறைகள் சமூக மதிப்பீடுகள் நோக்கில் காணும்போது நாகரீக சமூகத்தினின்று நடுத்தர, அடித்தள மக்கள் விலகி நிற்பதையும் அவர்தம் படைப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.புதினம் என்ற இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தி இமையம் சமூக ஆய்வை நிகழ்த்துகிறார். வெற்றுப்பொழுது போக்குச் சுவைக்காகப் பொய்மைக் கற்பனைகளை அவர் படைப்பதில்லை. கண் முன் காணப்படும் உண்மையுலகின் நடப்புக்களை வெளிப்படுத்துவனவாகவே இமையத்தின் புதினங்கள் அமைந்துள்ளன. சமூக ஆய்வுகளாக அவருடைய புதினங்கள் இருப்பதால் அவற்றைப் படிப்பதன் வாயிலாகச் சமூக நிலையை ஒருவர் கற்க முடியும். இமையம் கதைமாந்தர்கள் வெவ்வேறு வட்டாரங்களில் வாழும் மக்களைப் பற்றியும், பெண்களின் நிலையும், சாதி கட்டமைப்புகளில் ஊறிப்போன சாதிமக்களின் ஆதிக்கத்தையும் புதின படைப்புகளில் அறிய முடிகிறது. இமையம் மனித நேயம் மிக்கவர். சமூக மதிப்புகளில் ஈடுபாடுகொண்டவர்.*

***அன்பு***

*நேர்மதிப்புகளில் ஒன்றாக, அன்பு விளங்குகிறது. அன்பு கோவேறு கழுதைகளில் அன்பு வெளிப்படுவதை அறியலாம். ஒருவர் மற்றொருவர் மகிழ்விலும், நலத்திலும், வளர்ச்சியிலும், அக்கறை கொள்வதும், அதனைச் செயற்படுத்துவதும் அன்பாகும். மற்றவர் துன்பத்தைக் கண்டு இரக்கமுற்று அவர் துன்பம் துடைக்க முயல்வதும்*

*அன்பாகும். அன்பு ஒன்றே அனைவரையும் இணைக்க வல்ல கருவியாகும். அன்பினால்தான் வாழ்வும் வளரவும் முடியும். தன்னலமில்லாப் பெருவாழ்வு பெறத்துணையாக இருப்பது அன்பாகும். அன்புடையார் தம் எலும்பையும் பிறருக்கு உரிமையாக்கி விடுவார்கள்* ***(குறள். 72)*** *என்பது மட்டுமல்ல இன்பமாகவும் வாழ்வார்கள் என்பதை,*

***"அன்புற் றுஅமர்ந்த வழக்கென்ப வையகத்து***
***இன்புற்றார் எய்தும் சிறப்பு" (குறள், 75)***

*என்னும் குறள் உணர்த்துகின்றது. அன்பு ஒரு ஆக்கசக்தி, உயிர்களை இணைக்கும் மூல மந்திரம், அன்பு இருக்கும் இடத்தில் அமையிருக்கும். அமைதியிருக்கும் இடத்தில் இன்பம் இருக்கும். இந்த நல்ல நிலைகளுக்கெல்லாம் அன்பே வேராகிறது. எனவே தான் வள்ளுவப் பெருந்தகை அன்புடைமை என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.*

***அன்பின் பரிமாணங்கள்***

*அன்பு என்னும் மதிப்பைச் சுற்றி மகிழ்ச்சி, மனநிறைவு பரிசு, கருணை, ஈகை, நட்பு, மனித நேயம், பொறுமை மன்னிப்பு, தியாகம், விருந்தோம்பல், குடும்பப்பாசம், குடும்பப் பொறுப்பு, மரியாதை, பயன்பட வாழ்தல், உழைப்பவருடன் கலத்தல், சமூக உணர்வு அநீதிக்கெதிரான போராட்டம், உலகக் குடிமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறர் உயிர்களைப் பேணல் ஆகிய சமூக மதிப்புகள் இணைந்துச் செயல்படுகின்றன. இவையே அன்பின் பரிமாணங்களாகும். அன்புத்தான் இறைவனோடு மனிதனை இணையச் செய்கிறது. இறையின்பத்தையும் தருகிறது என்பதை,*

***"அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக்காக்க வந்த***
***இன்பப் பெருக்கே இறையே பராபரமே"***

*எனும் தாயுமானவர் பாடல் உணர்த்துகிறது.*

***(தாயுமானவர் பாடல்கள் பா.எண். 340***
***தாயுமானவர் பாடல் தொகுப்பு, ப. 446, சு.ந. சொக்கலிங்கம், எம்.ஏ.)***

***"அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலர்***
***அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்***
***அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"***

*அன்பைப் பற்றிதிருமூலர் பாடல் வழிஅறியமுடிகிறது.*

***(திருமூலர், திருமந்திரம் மூலமும் – விளக்க உரையும், ப.118)***

*மேலும், "அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது.*

*அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது. சினமடையாது, தீங்கு நினையாது.*

*அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.*

*சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும் சகலத்தையும் சகிக்கும்.*

*அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம் அறிவானாலும் ஒழிந்துபோம்.*

***"நம்முடைய அறிவு குறைவுள்ளது ஆனால் அன்பு ஒரு போதும் அழியாது" (பைபிள், 1 கொரிந்தியர் ப. 239)***

*என்று அன்பைப் பற்றி கிறித்துவ வேதமாகிய விவிலியம் எடுத்துரைக்கிறது. பிறர்மேல் அன்பு செலுத்துவதேயே மனித வாழ்வின் நோக்கமாகவும் மனித சமூகம் சிக்கலின்றி தொடர்வதற்கான உயிர்ப்பாகவும் இந்த அன்பு அடிப்படையாக உள்ளது.*

*இமையம் கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் ஆரோக்கியம் என்ற கதைமாந்தர் வழி அன்பின் விளக்கத்தை அறியமுடிகிறது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் சந்தித்த தன் வருங்கால மருமகனை பார்த்ததும் கல்லில் அறைய மேலே தூக்கிய சேலைத்துணியை அப்படியே போட்டுவிட்டு வந்து ஆரோக்கியம் திரவியராஜைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். தன் குறைகளையெல்லாம் சொல்லிச்சிணுங்கி அழ ஆரம்பித்தாள்.*

***"இப்பத்தான் வய்யி தெரிஞ்சுதா?"***
***"அதெல்லாமில்ல;***
***"மனுசமக்க, சாதி சனமின்னு எட்டிக்கூடப் பாக்க மாட்டின்னிட்டியே" (இமையம் கோவேறு கழுதைகள், ப. 73)***

*என்று பேசும் ஆரோக்கியத்தின் வழியாக அன்பு வெளிப்படுவதை காணமுடிகிறது.*

***கல்வி***

*கல்வி (Education) என்பது மன வளர்ச்சியில் அறிவு நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறையை முறையாக வழிநடத்துவதிலும், சமூகத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம், அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்கிறது. கல்வி கற்றலையும் கற்பித்தலையும் குறிக்கும்.*

***கல்வி – பொருள் விளக்கம்***

***கல்வி என்ற தமிழ்ச் சொல் "கல் (ஆய்வுசெய்) என்ற வேர்ச்சொல்லில் இருந்து வருகின்றது" (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, ப. 504)***

*கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் Education என்பதாகும். இந்த சொல் "Education" என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்த Education சொல்லானது வளர்த்தல் என்ற பொருளைக் குறிக்கிறது. (தமிழ் ஆங்கில அகராதி) ஆக கற்பித்தல், பயிற்றுவித்தல் என்னும் பொருளைத் தரும். Educo என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.*

*இந்தச் சொல்லிற்கு ஒத்த சொல் வெளிக்கொணரல், உயர்த்திவிடல், முன்னேற்றிவிடல் போன்றப் பொருளைத் தரும் Educo என்பதாகும். கல்வி என்பது தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களை உள்ளார்ந்த தகுதிகளை வெளியில் கொண்டு வருவதாகும்.*

***கல்வியின் பயன்கள்***

*சமூகத்தில் கல்வியும் செய்முறைவிதிகளும் ஒரு மனிதனை உருவாக்குகின்றன. தனி மனிதனின் குழுமமே சமூகமாகும். கல்வியின் பயன்களைப் பற்றி வைரமூர்த்தி கூறுவது.*

> ***"சமூகப் பண்பாட்டிற்கு ஏதுவான ஒரு தொழிலைக் கற்றுக்கொடுப்பது. தன்னுடைய சூழல் மட்டுமன்றி ஏனைய பிற பகுதிகளின் சூழலினையும் அறிந்துகொள்ள கல்வி ஒரு வாய்ப்பாக அமைகின்றது. அறிவினால் விழுமிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு செம்மாந்த இயல்பினைப் பெற்று தம் அருகில் உள்ளவர்கள் மட்டுமின்றி ஏனைய பிற பகுதியினரின் செய்முறைகளையும் நுட்பமாக அறிய வழிவகுப்பது. சமூக வளம் மற்றும் பொது நலனின் பண்பாட்டை உணர்ந்து, சமூகத்தேவையாகக் கைத்தொழில் கல்வியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சூழலில் உள்ள மக்களின் முன்னேற்றத்தின் ஊன்று கோலாய் அமைவது. மக்களிடையே உள்ள வேறுபாடுகளையும் இடைவெளியையும் குறைத்து சமூகச் செயல்பாட்டினை அளவிட்டு வரைமுறைப்படுத்த கல்வி பெரிதும் பயன்படுகிறது." (வைரமூர்த்தி, தமிழ்ச் சிறுகதைகளில் வாழ்வியல் மதிப்பும் மாற்றமும், ப. 74)***

*என தமிழ்ச் சிறுகதைகளில் வாழ்வியல் மதிப்பும் மாற்றமும் என்ற தமது நூலில் கூறியுள்ளார்.*

> ***தொடக்க காலத்தில் கல்வி தேக்கமுற்ற நிலையில் சமூகமும் தேக்கமுற்றதாய் இருந்தது. இத்தேக்கம் பொருளாதார மாற்றத்தின் காரணமாக மாறுதல் பெறுகின்றது. இந்நிலையில் உருவான அறிவியல் மாற்றமும், பிறதுறை அறிவும், மக்கள் மனதில் ஒருவிதத் தேடலினையும் வேட்கையையும் உருவாக்கியது. இப்பின்னணியில் உருவாக்கம் பெற்றதே முறைசாராக் கல்வியாகும்.***
>
> ***இம்முறைச் சாராக் கல்விப் பணியில் அரசு மற்றும் பிற சுய சேவை நிறுவன்ஙகளும் ஈடுபட்டு வந்தன. பொது மக்களின் வளர்நிலை, பொருளாதார உயர்வு, நாட்டு நலப்பணிகள், தனி மனிதச் சுகாதார விழிப்புணர்வு போன்றவை முறைசாராக் சாராக கல்விப் பணியில் அரசு மற்றும் பிற சுயசேவை நிறுவனங்களும் ஈடுபட்டு வந்தன. பொது மக்களின் வளர்நிலை, பொருளாதார உயர்வு, நாட்டு நலப்பணிகள் தனிமனிதச் சுகாதார விழிப்புணர்வு போன்றவை முறைசாராக் கல்வியின் வளர்ச்சிநிலையே தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் அமைந்தது எனலாம். சிறந்த கல்வி என்பது பற்றி***

***முனைவர் சு. ஏழுமலை அவர்கள் சங்க இலக்கியங்களில் மனித மதிப்புகள் என்னும் நூலில் விளக்கியுள்ளார். அவை,***

> ***"ஒழுக்கம், உண்மையே பேசுவது, புலனடக்கம், மன அடக்கம், விருந்தினரை உபசரிப்பது மற்றவர்களுக்கு உதவுவது, தாய், தந்தை மற்றும் ஆசிரியர்களை மதித்து வணங்குவது, தீமையற்ற செயல்களையே செய்வது, இப்படிப்பட்ட ஒழுங்கு முறையை மாணவர்களுக்கு பயிற்சியாக்கி விடுவதே சிறந்த கல்வி. படகு, இது துடுப்பு, இந்தத் துடுப்பை இப்படிப் போட்டால் படகு நீரில் செல்லும் என்று பாடமாகச் சொல்லாமல், பயிற்சி அளித்துவிட்டால் மாணவன் இன்னும் தெளிவு பெறுவான். அதே போன்று, வருமானத்துக்கான கல்வியை மட்டும் கற்பிக்காமல், வாழும் முறை, பழகும் தன்மை, பேசும் விதம் என்று எல்லாவற்றையும் முறைப்படி கற்பிப்பது தான் வாழ்க்கைக்கல்வி" (ஏழுமலை, முனைவர் சு. சங்க இலக்கியங்களில் மனித மதிப்புகள்,ப. 56)***

*என முனைவர் சு. ஏழுமலை குறிப்பிட்டுள்ளார்.*

*கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் மேரி என்னும் பாத்திரத்தின் வழி ஆசிரியர் இமையம் கல்வியின் அவசியத்தை வெளிப்படுத்துவதை பின்வரும் வரிகள் விளக்குகின்றன.*

> ***"ஜோசப்புடன் போகும்போது, லெட்டர் போடுகிறேன் என்றாள். திகைத்துப் போனாள் மேரி. "கடுதாசி எனக்கா? நீதான் உடனே வந்துடுவியே, அப்புறம் அதெல்லாம் எதுக்கு? (இமையம், கோவேறு கழுதைகள், ப. 49)***

*சரி என்று போனவள்தான். இன்று வரை வரவில்லை. அவள் கற்றுத்தந்த பெயரை மேரி தமிழிலும் ஆங்கிலத்திலும் தனியாக இருக்கையில் தரையில் கோடு கோடாக எழுதிப்பார்த்தாள்.*

**காதல்**

*காதல் (Love) என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை உணர்வு, சேர்ந்து வாழ வேண்டும் என்பவனவற்றை உடைய ஓர் ஆசை ஆகும். பொருட்கள், இயற்கை, தொழில், கலை, கருத்தியல்கள் என பலவற்றை நோக்கியும் காதல் ஏற்படும் என்று கூறப்பட்டாலும், அவற்றின் பொருள் வேறுபட்டது. அன்பு என்பது முதல்நிலை; அதன் இரண்டாவது நிலை காதலாகும். உலகிலுள்ள அனைத்து உயிர்களும் உய்த்த ஒன்று காதலாகும். தொடக்க நிலையில் மனிதனின் வாழ்வியலை, காதல் வீரம் என்ற இரண்டு நிலைமை மட்டு வைத்துப்பகுப்பர். ஒரு சூழலில் ஆண், பெண் உளவியற்படியும் மட்டுமின்றி உணர்வுப் பூர்வமாகவும் ஈர்க்கப்படுவது இயற்கையில் நியதியாக உள்ளது. உணர்வு, அறிவு, உடல் இம்மூன்று அடிப்படையில் நிகழும் ஆண் பெண் ஈர்ப்பே காதலாகும். காதல் என்பது இன்றியமையாத ஒன்று ஆகும். ஆக காதல் சமூக மதிப்பினை பெறுகின்றன.*

*கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் காதல் பற்றி இடம் பெறுவதைக் காணமுடிகிறது.*

***"மேரியிடம் நிறையப் பேச வேண்டும், ஏதேதோ கேள்விகள் கேட்க வேண்டுமென்று தான் திரவியராஜ் நினைத்தான். ஆனால் மேரி, முன்பின் தெரியாத ஆளிடம் பேசுவது போல இருந்தாள். அவன் வருகையை அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் முக அவள்நெஞ்சில் கலவரத்தை உண்டாக்கிற்று 'வயசுக்கு வந்துட்டா, அதான் வெக்கப்படுறா? என்று அவன் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டான்" (இமையம், கோவேறு கழுதைகள், ப. 65)***

*தன் மனதில் இருக்கும் காதலை திரவியராஜ் சொல்ல முடியாமல் தவிப்பதை அறியமுடிகிறது.*

***தாய்மை***

*தாய் என்பவள் நம் அனைவருக்கும் சிறப்பானவள். இவ்வுலகில் மிகவும் உன்னதமான உறவு தாய். காலங்கள் மாறினாலும் என்றும் மாறாதது, அளவிலும் குறையாதது தாயின் அன்பு. மரத்துக்கு முக்கியமானவை வேறு நீரும். அது போல், குழந்தைக்கு முக்கியமானவை அன்னையும் அவளின் அன்பும். தாயின் அன்பிற்கு மட்டுமே கல்லையும் கறைக்கும் சக்தி உண்டு. இவ்வுலகத்தில் சுயநலம் இல்லாத ஒருத்தி தாய் ஏனென்றால் தான் அறிந்து அறியாதது ஆகிய அனைத்துதையும் தன் பிள்ளை கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவாள். தன் பிள்ளைக்கு உடம்பு சரியில்லையென்றால் துடிப்பாள். தான் சாப்பிடாவிட்டாலும் தன் குழந்தைக்கு வெறு வயிற்றுடன் இருக்ககூடாது என்று நினைப்பவள் தாய். ஒரு அன்னையின் இடத்தை யாராலும் நிரப்பிடவே முடியாது. தாயன்பு நிபந்தனையற்றது. தன்னமில்லாதது. ஒரு குழந்தையைப் பெற்று, வளர்த்து, முனைப்போடு பாதுகாக்கும் திறமை தான் ஒரு அன்னையை சிறப்பாக்குகிறது. நாம் காயப்பட்டிருக்கும் போது அழ ஒரு தோள் வேண்டும் என நினைக்கும் போது அம்மாவை தவிர வேறுயாரையும் நாம் தேடுவதில்லை உயிருக்குள் அடைக்காத்து உதிரத்தை பாலாக்கி, பாசத்தில் தாலாட்டி பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து நமக்காகவே வாழும் அன்பு தெய்வம்தாய். ஒரு பெண் பிறரால் விரும்பப்படுகிறாள். எனினும் ஒரு தாய்தான் பிறரால் மதிக்கப்படுகிறாள். இந்தியாப் பெண்கள் பிறரால் விரும்பப்படுவதை விடவும் மதிக்கப்படுவதை அதிகம் விரும்புகிறார்கள். மேலைநாடுகளில் பெண்மைதான் அதிகம் கொண்டாடப்படுகிறது. இத்தகைய பெருமை மிகுந்த தாய்மையை இமையம் புதினங்களில் எவ்வாறுயெல்லாம் சமூக மதிப்பாக இடம் பெறுகிறது என்பதை பின்வரும் வரிகளில் காணலாம். கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் ஆரோக்கியம் தன் மகள் மீது இருக்கும் அக்கறையை ஆசிரியர் விளக்குகிறார்.*

***"ஆரோக்கியத்திற்குத் திடீரென்று பயம் உண்டாயிற்று. மேரியை ஏன் அனுப்பி வைத்தோம் என்றிருந்தது. மேரி சினிமாப் பார்க்கப்போகும் இடத்திற்கும் குள்ளக் கறுப்புசாமி கோவிலைத் தாண்டித்தான் போக வேண்டும். இந்தச் சாமியை 'துஷ்டதேவாதி' என்றுதான் அழைப்பார்கள். தீட்டுக்காரப் பெண்கள் யாரும் இந்தக் கோவிலின் வழியே போகமாட்டார்கள். எதிர்பாராமல் வழியில் அது ஏற்பட்டுவிட்டாலும் அவ்வளவுதான் கோணக் கோணப் பிடித்திழுக்கும் வயிற்றுவலி உண்டாகும். அளவில்லாமல் உதிரமாக ஓடும், நிற்காது, தூரமாக இருக்கும்***

***பெண்கள் நான்காம் நாள் தலைகுளித்த பிறகுதான் அந்த வழியே போகலாம். வேறு வழியும் இல்லை. ஊர்த் தெருவுக்குப்போக, ஊரையே சுற்றிக்கொண்டு தான் போக வேண்டும். போன கார்த்திகையில் தலை முழுகாமல் மறந்துபோய் அந்த வழியே வந்த ஒரு காலனிப்பெண்ணுக்கு, வீடு வருவதற்குள் நொங்கும் நுறையுமாகத் தள்ளி, இரண்டு நாள் படுத்தபடி கிடந்து பிறகு செத்துப்போனாள்." (இமையம், கோவேறு கழுதைகள், ப. 97)***

*அதுபோன்று தன் மகள் மேரிக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று தவிக்கும் ஆரோக்கியத்தின் தாய்மை வெளிப்படுவதை காணமுடிகிறது.பாசம் என்பது (Affection or Fondness) என்ற அரிதான ஒருவரின் அல்லது ஒருபொருளின் மீது கொண்ட மனதாலும் உடலாலும் சார்ந்த பற்று மனக்கிளர்ச்சி வியாதி, செல்வாக்கு, வாழ்தல் என பல மனவியல் சார்ந்த ஒரு பண்பு. தாய்தன் பிள்ளைகளின் மீது காட்டும் பாசம், தந்தை தன் பிள்ளைகளின் மீது காட்டும் பாசம், மக்கள் பெற்றோரிடம் காட்டும் பாசம், அண்ணன் தம்பி பாசம், அக்கா தங்கை பாசம், உறவினர் பாசம், விலங்குளின் மீது இருக்கும் பாசம் என பல்வேறு விதங்களில் பாசம் காணப்படும்.*

***"பாசம் என்பது எதனையும் மற்றவரிடமிருந்து எதிர்பார்க்காது காட்டும் பேரன்பாகும். சில மனவியல் வல்லுநர்கள் இது பற்று, நட்பு, காதல் போன்றவற்றை விட அதிக சத்திவாய்ந்ததென்று கூறுவர்" (பாசம், தமிழ் விக்கிப்பீடியா)***

*கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் ஆரோக்கியத்தின் இளைய மகனை கிறித்துவ பாதிரியார் ஆவதற்கு கேட்கிறார்கள். அதற்கு ஆரோக்கியம், "நெஞ்சுங்கிறது ரத்தத்தாலயும் சதையாலயும் ஆனது" தன் மகனை துறவரம் அனுப்ப மறக்கும்போது தாய்மை பாசம் வெளிப்படுவதை பின்வருமாறு அறியமுடிகிறது.*

***"நாட்டுலே இருக்கிற கோடான கோடி மனுஷான எல்லாம் நிலம், பலம், ஊடு, வாசல்ன்னு சொந்தமா வச்சிக்கிட்டா உசுரு வாயிறாங்க? நம்பளமாரி நாட்டுல எம்புட்டோ இருக்குதுங்க. கொறவன் எந்த நிலத்த வச்சிருக்கிறான்? ஊடு, வாசல், நிலம், பலம், ஏனம், பானம் உண்டா? ஈயம் பூசுறவுங்க, பூம்பூம் மாட்டுக்காரன்; ஜோசியம் சொல்லுற மலயாளத்தான், குடுகுடுப்பக்காரன், பாம்பு புடிக்கறவுங்க, புட்டி மொறம் விக்கிற கொறத்தீ, கூத்தாடி, தொம்பன், கிணறு வெட்டுற, கல்லு உடைக்கிற ஒட்டன் இவுங்க எல்லாம் எந்தச் சொத்துத்தெக் கண்டாங்க? எதுவும் இல்லன்னாக் கூடவுவுத்துல செமந்த புள்ளெய யாரு அய்யோன்று தெருவுல வுட்டுகிறாங்க சாமி?"***

***"நெஞ்சுங்கிறது ரத்தத்தாலயும் சதையாலயும் உண்டானது சாமி. இரும்பால இல்ல." (இமையம், கோவேறு கழுதைகள், ப. 116) என்று தாய் பாசம் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.)***

***கோவேறு கழுதைகளில் எதிர்நிலை மதிப்புகள்***

*மானுடத்தின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவுவன நேர்மதிப்புகள் என்றும் வரையறுக்கலாம். மேலும், நேர்மதிப்பினை மறுக்கும் எதுவும் எதிர்மதிப்பாகிறது.*

*அதாவது நேர்மதிப்பு போற்றப்படாதபோது அதுவே எதிர்மதிப்பை ஆதரிப்பதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அன்பு, கல்வி, காதல், கற்பு, தாய்மை, பாசம், தியாகம், ஒழுக்கம், குடும்பம், நட்பு ஆகிய தலைப்புகளில் நேர்நிலை மதிப்புகள் சமூக மதிப்பாக எவ்வாறு பரிமாணம் பெற்றது என ஆராயப்பட்டது இனி எதிர்நிலை மதிப்புகளைப் பற்றி கீழ்காணும் தலைப்புகள் வாயிலாக ஆராயப்படுகிறது.அன்பின்மை,சாதி, தீண்டாமை, லஞ்சம், குடி போன்ற எதிர்நிலை மதிப்புகள் சமூக மாற்றத்தின் வாயிலாகப் புடம் போடப்பட்டு மக்களிடம் செல்கின்றது. வாழ்க்கை என்பது ஒரு பரந்துபட்ட கடல் போன்றது. இதில் சமூகம் மக்களுக்கு வழங்கும் மதிப்பு நன்முகத்தைப் போன்றது. காலங்காலமாக மனிதச் சமூக கட்டமைவுக்குள் வழி நடத்துவது மதிப்புகள் தான். மதிப்புகளின் உயர்வு நிகழும் ஒவ்வொருபொழுதும், மனித வாழ்வு ஏதேனும் ஒரு புரட்சியை எதிர் கொள்ள வேண்டும் ஒருவர் செய்யும் செயல் சமூக விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருந்தால் அதுவே நேர்நிலை மதிப்பு என்றும் சமூக விதிமுறைகளை மீறும் அனைத்து செயல்களும் எதிர்நிலை மதிப்பு என்றும் உருப்பெறுகிறது. இவ்எதிர்நிலை மதிப்புகள் இமையம் புதினங்களில் எவ்வாறு இடம் பெறுகிறது என்பதை இனி ஆராயலாம்.*

***அன்பின்மை***

*மனிதனின் அடிப்படை குணமே அன்பாகும். இது ஒருவர்மீது ஒருவர் காட்டும் அக்கறையின் மூலம் வெளிப்படுகிறது. கணவன், மனைவி இருவரிடையே நிலவுகின்ற அன்பு, பெற்றோர் பிள்ளைகளிடம் காட்டுகின்ற அன்பு, உடன்பிறந்த சகோதர சகோதரிகளிடயே இருக்கின்ற அன்பு, வயதான பிறகு பெற்றோர்கள் மீது பிள்ளைகள் காட்டும் அன்பு, தோழர் தோழிகளிடையே நிலவுகின்ற அன்பு என அன்பு பல நிலைகளில் வெளிப்படுகின்றது. இத்தகு அன்பு வெளிப்படாதபோது அது எதிர்நிலை மதிப்பாகிறது.கோவேறு கழுதைகள் என்னும் புதினத்தில் மாமியார் மருமகளுக்கு சண்டையில் அன்பின்மை வெளிப்படுவதை காணமுடிகிறது.*

> ***“சகாயமும் ஆரோக்கியமும் சாதாரணப் பிரச்சினைகளில்தான் சண்டையைத் தொடங்குவார்கள். சகாயம் வழக்கமான இடத்திற்குப் பதிலாகப் பொருள்களை இடம் மாற்றி வைத்திருப்பாள். சில பொருள்களை வைக்கும்போது சப்தம் எழ வைப்பாள். மண் சாமான்கள் உடைந்துவிடும். வரிசையாகப் பனைமரம் போல் நிற்கும். மண் மொடாக்களில் எந்தப் பொருள் எதனுள் இருக்கிறதென்று தெரியாது. ஒருமொடாவில் பலவகையான தானியங்கள் வேர்முண்டுகள் போல் சிறுசிறு முடிச்சுகளாக முடிந்துபோடப்பட்டிருக்கும். ஒரு மொடாவில் ஒரே வகையான தானியம் தை, மாசி மாதங்களில் மட்டும்தான் இருக்கும். ஆரோக்கியம் ஒரு தானியத்தின் பெயரைச் சொல்லி எடுத்துவரச் சொல்வாள். சகாயம் ஒவ்வொரு மொடாவாக இறக்கி, அதனுள் இருக்கும் முடிச்சுகளைத் தனித்தனியாக அவிழ்த்துப் பார்ப்பாள். முடிச்சுகளை அவிழ்க்கையிலும், அவற்றை முடிகையிலும் ஒன்றுடன் ஒன்று கலந்துவிடும்; அல்லது, முடிச்சுகளைச் சரியாக முடியாமல் விட்டுவிடுவாள். அடுக்கப்பட்ட மொடாக்கள் சரியாக அடுக்கினுள் பொருந்தாமல் நிற்கும். வேகமாக வைத்து வீறல் விட்டிருக்கும்.***

***தண்ணீர்ப்பானை மூடாமலிருக்கும். இரவில் சோற்றுப்பானைகளை மூடாமல் விட்டிருப்பாள். தையலுக்கு வந்த துணிகள் ஒழுங்கில்லாமல் சிதறிக்கிடக்கும். முகப்பவுடர் தரையில் கோலமாவு போல் கொட்டியிருக்கும் கண்மை சுவரில் பட்டை பட்டையாய்ப் பூசப்பட்டிருக்கும். நெத்திப் பொட்டு மாவு கொட்டியிருக்கும்., அடிக்கடி தலையைச் சீவுவாள். கண்ணாடியில் தான் தன்னைப் பார்த்துக்கொள்வாள். பறவைபோல் அவ்வப்போது கொஞ்சும் சாப்பிடுவாள். பகலில் தூங்குவாள். மேரிக்கு சினிமாக்கதை, பாட்டுசொல்லித்தருவாள். இவற்றில் ஒன்றை ஆரோக்கியம் பிடித்துக்கொள்வாள். ஜென்மப் பகைவர்கள் போல் சண்டை நடக்கும். (இமயம், கோவேறு கழுதைகள், பக். 45-46)***

*இவ்வாறு அன்பின்மை கோவேறு கழுதைகள் புதினத்தில் வெளிப்படுவதை காணமுடிகிறது.*

***முடிவுரை***

*மானுடத்தின் உயர்வுக்கும் வெற்றிக்கும்உறுதுணையாக அமைபவை நேர்மதிப்புகள் என்றும், அல்லாதவை அனைத்தும் எதிர்மதிப்புகள் என்றும் கூறப்படுகிறது. அன்பு ஓர் ஆக்க சக்தியாக விளங்குகிறது. உயிர்களை மனிதநேயத்துடன் இணைக்கும் மூல மந்திரமாக அன்பு பாலமாக அமைகிறது. அன்பு இருக்கும் இடத்தில் அமைதி இருக்கும் அமைதி இருக்கும் இடத்தில் இன்பம் இருக்கும். இதனால் அன்பு நேர்நிலைமதிப்பாக அமைகிறது. தனிமனிதனைச் சமூகத்தில் உயர்வடையச் செய்வதற்கும் காரணியாகவும் மனித வாழ்க்கை செழிப்பதற்கு அடிப்படையாகவும் அமைவது கல்வி என்பதை புதினங்கள் அறிவுறுத்துகின்றன. அன்பு என்பது முதல்நிலை, அதன் இரண்டாவது நிலை காதலாகும். உலகிலுள்ள அனைத்து உயிர்களும் உய்த்த ஒன்று காதலாகும் என்பது விளக்கம் பெறுகின்றது. சமூக மதிப்பை உயர்த்தும் அனைத்தும் நேர்மதிப்புகள் என்றும், அல்லாதவை அனைத்தும் எதிர்மதிப்புகள் என்றும் வரையறுக்கலாம். அன்பின்மை, சாதி, குடி, தீண்டாமை, களவு, ஆண், பெண் ஒழுக்கம் விதிமுறைகள் மீறப்படுதல் போன்றவை சமூகத்திற்கு எதிரான செயல்களாகும். ஆகவே, இவை எதிர்நிலை மதிப்புகள் என்று கூறப்படுகிறது. நேர் மதிப்பு எவ்வாறு சமூக மதிப்பாக விளங்கியதோ அதே போன்று சமூகத்திற்கு எதிரான செயல்கள் அனைத்தும் எதிர்நிலை மதிப்பினை பெறுகிறது என்பதும் இவ்வாய்வின் மூலம் அறியப்படுகின்றன.*

***பார்வை நூல்கள்***


1. *Chitambar, J.B.* — *Introductory Rural Sociology, Weley Eastern Private Limited, New Delhi.*
2. *Frankel Jack. R., Prentice – Hall, Inc.,* — *How to Teachabout Values, Englewood Cliffs, New Jersy, 1977.*
3. *Amaresh* — *Encyclopedia of Indian Literature Vol-1, Sahitya Academy Publications, New Delhi - 110 002, Edition 1987.*
4. *Mills Teodore. M.,* — *The Sociology of Small Groups*

*Prentice Hall of India Private Ltd.,*
*New Delhi, Indian Print, 1969.*

5. *Bertrand Alvin. L.,* — *Associates and Rural Sociology*
*Megraw Hill Book Company*
*New York, 1958.*

6. *சொக்கலிங்கம், எம்.ஏ.,* — *தாயுமானவர் பாடல் தொகுப்பு*
*பழனியப்பா பிரதர்ஸ், 2009*

7. *மாணிக்கவாசகன். ஞா.,* — *திருமூலர் திருமந்திரம்*
*மூலமும் – விளக்க உரையும்,*
*உமா பதிப்பகம்,*
*18 (பழைய எண். 171), பவளக்காரத் தெரு,*
*மண்ணடி, சென்னை – 600001.*
*ஆகஸ்ட், 2011.*

8. *--* — *பரிசுத்த வேதாகமம்*
*இலங்கை வேதாகமச்சங்கம்*
*293, காலிவீதி*
*கொழும்பு – 3.*

9. *முகிலை ராசபாண்டியன்* — *திருக்குறள்*
*முக்கடல் பதிப்பகம்*
*11, 33-ம்தெரு,*
*பாலாஜி நகர், புழுதிவாக்கம்,*
*சென்னை – 91.*

10. *ஏழுமலை, முனைவர்* — *சங்க இலக்கியங்களில் மனித மதிப்புகள்,*
*சகிலா தேவி பதிப்பகம்*
*திருநின்றவூர்*
*சென்னை – 2015*

11. *இமையம்* — *கோவேறு கழுதைகள்*
*கிரியா பதிப்பகம்*
*திருவான்மையூர்*
*சென்னை – 600041*
*ஜீலை 1994.*